2010 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாகிறபோது பாலை குளிரூட்டுவதற்காகத்தான் பால் குளிர்விப்பான்கள் அமைக்க முடியுமே தவிர, குளிர்விப்பான்களை அமைத்துவிட்டு பால் உற்பத்தியைப் பெருக்க முடியாது. நிச்சயமாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 5-ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த நேரத்தில் பல்வேறுத் திட்டங்கள்மூலமாக ஏழை விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வழங்கக்கூடிய திட்டங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே விளாத்திகுளம் தொகுதியில் புதியதாக சங்கங்கள் அமைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகளை வழங்கி நிச்சயமாக அந்தப் பகுதியில் ஒரு குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

160—

தொழில் மையம்

***119037—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் கதர் கிராமத் துறை சார்பாக தொழில் மையம் அமைத்து வேலைவாய்ப்பிற்கு வழி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் தொழில் மையம் அமைத்திட தற்பொழுது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

[2010 மே 10

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் மிக வறட்சியான பகுதி. அங்கே கிராமங்களின் முன்னேற்றத்திற்கு கதர்த் துறை மிகுந்த பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. போளூரிலே தொழிற் பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், தமிழகத்திலே பள்ளி, கல்லூரிகளிலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்காக கதர்த் துறை மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு ஏதாவது புதிய திட்டங்கள் அரசிடம் இருக்கின்றனவா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் போளூரில் ஆயத்த ஆடைகள் தயாரிப்புத் தொழிற் கூடமும், கண்ணமங்கலம் மற்றும் அனக்காவூர் ஆகிய இடங்களில் செங்கல் சூளைகளும், படவேடு என்ற இடத்தில் பித்தளைப் பாத்திரம் தயாரிக்கும் தொழிற் கூடமும் அமையப்பெற்று, தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் அச்சுக் கூடமும், வந்தவாசியில் பாய் முடையும் தொழிற் கூடமும், செங்கத்தில் தச்சு, கருமார் தொழிற் கூடமும் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அமைக்கப்பட்டு, கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து செயல்பட்டு வருகின்றன. எனவே, போளூரில் புதிதாக தொழில் மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 மே 10]

மேலும், திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கோரியவாறு புதிதாகத் தொழில்கள் தொடங்க வேண்டுமென்றால், இந்த வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 116 தொழில்களில் ஏதேனும் ஒரு தொழிலை அந்த இடத்தில் தொடங்குவதற்கு, அந்த இடத்தில் கிடைக்கின்ற மூலப் பொருட்களை வைத்தோ அல்லது வேறு வாய்ப்புகளை வைத்தோ தொழில் செய்ய விரும்புவோர், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின்கீழ் 25 இலட்சம் ரூபாய்வரை கடன் பெற்று, அதற்கு 25 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை மானியத்தைப் பெற்று அல்லது கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பதிவு செய்து அதன்மூலம் தொழில் மையங்களை அமைத்துக்கொள்ளலாம். மேற்கூறிய தொழில் செய்ய விரும்புவோர் திருவண்ணாமலை மாவட்ட கதர்த் துறை உதவி இயக்குநர் அவர்களை நேரில் அணுகி தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மருத்துவச் சிகிச்சைக்காக தமிழகம் வர மத்திய அரசின் அனுமதி குறித்து முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கை. (குறுக்கீடு) 110-ன்கீழ் அறிக்கையை அளிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். விதி 110-ன்கீழ் அறிக்கையை அளிக்கட்டும். (குறுக்கீடு) அதற்கெல்லாம் உறுதி சொல்ல முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) 110-ன்கீழ் அறிக்கை அளித்த பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.